Available online at www.jilile.in ISSN: 3048-4952

JOURNAL OF INDIAN LANGUAGES
AND INDIAN LITERATURE IN ENGLISH

Journal of Indian languages and Indian literature in English, 02(04), 193-205; 2025

அதி (ati) சொற்பிறப்பியல் மீளாய்வு

அகத்தியன் சிவமணி
மென்மியப் பொறிஞர்
Accenture Solutions Pvt.Ltd
பெங்களூரு
இந்தியா
agathiyansivam@gmail.com
9080083047

APA Citation:

அகத்தியன் சிவமணி. (2025). அதி (ati) சொற்பிறப்பியல் மீளாய்வு. Journal of Indian Languages and Indian literature in English, 02(04), 193-205; 2025.

Submission Date:02.3.2025

Acceptance Date:24.3.2025

ஆய்வுச் சுருக்கம்

இக்கட்டுரை சமஸ்கிருத “அதி” (Sanskrit *áti* ‘beyond, over; very, exceedingly’) எனும் மிகை கருத்து முன்னொட்டு சொல்லின் சொற்பிறப்பை ஆராய்கிறது. ***$h_1$eti*** எனும் தொல் இந்தோ-ஐரோப்பிய வேரில் (Proto Indo-European Root) இருந்து உருவானதாக மொழியியலாளர்களால் கருதப்படுகிறது. இச்சொல் திராவிட மொழிகளிலும் அதே பொருளில் பல இடங்களில் பயன்பாட்டில் உள்ளது. சங்ககாலத்தில் ஒரு அரசின் பெயராகவே (அதியர் குடி- Atiyar Clan) இச்சொல் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. இது இச்சொல்லுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த தொல் இந்தோ-ஐரோப்பிய வேரை மீளாய்வு செய்வதுடன், இச்சொல்லுக்கான திராவிட மூலத்தை சுட்டி, அதன் சொற்பிறப்பியல் தோற்றம், பயன்பாடு, வரலாற்று முக்கியத்துவத்தை திராவிட மொழியியல் நோக்கில்,

ஆரிய இலக்கியச் சான்றுகளுடன் இக்கட்டுரை ஆராய்கிறது.

குறிப்பு சொற்கள் – *உதி, அதி, உதியன், அதியன்,* இந்தோ-ஐரோப்பியம், திராவிட, வரலாற்று மொழியியல், சங்க இலக்கியம், சமஸ்கிருதம்.

முன்னுரை :

அதி (Sanskrit ***áti*** ‘beyond, over; very, exceedingly’) எனும் மிகை கருத்து முன்னொட்டு சமஸ்கிருதத்துக்கு உரியதாகக் கருதப்படுகிறது. பாலி மொழியிலும் அதி (***ati***) எனும் சொல் இதே பொருளில் கையாளப்பட்டுள்ளது. இந்தோ-ஈரானியத்திலும் [Avestan. ***aiti****,* Old Persian. ***atiy*** <Over, Back, beyond>] மிகை கருத்துப் பொருளில் கையாளப்பட்டுள்ளது. திராவிட மொழியான தமிழிலும் “*அதி*” எனும் சொல் மிகை, கூடுதல், உயர்வு எனும் பொருளில் கையாளப்படுகிறது. அதேவேளை ***áti* (Skt)*, aiti* (Avt)*, atiy* (Old.Per)** முதலிய சொற்களின் மூலமாக ****h₁eti*** எனும் தொல் இந்தோ-ஐரோப்பிய வேர் (Proto Indo-European Root) காட்டப்படுகிறது. பிற திராவிட மொழிகளான கன்னடம், மலையாளம், தெலுங்கு, துளு முதலியவற்றில் இச்சொல் மிகுதிப் பொருளில் கையாளப்படுகிறது. ஆனால் இம்மொழிகள் அச்சொல்லைச் சமஸ்கிருதத்திலிருந்து கடனாக (Loan Word) பெறப்பட்டதாக அகராதிகள் குறிப்பிடுகின்றன.

இந்தியா மொழிகள் பெரும்பாலானவற்றில் பயன்படும் இச்சொல் இந்தோ-ஐரோப்பிய தொடர்பு உடையதாகக் கூறப்படுகிறது. திராவிட மொழிகளில் உயர்ச்சி கருத்து வேராக உள்ள “***உ***” –உதி இதை ஒத்ததாக உள்ளது. ***உகர*** > ***ஒகர*** > ***அகர*** மாற்றம் மூலம் ***உதி*** > ***ஒதி*** > ***அதி*** – ஆக மாற்றம் பெற்று திராவிட மொழிகளில்

வழக்கிலிருந்திருக்கலாம்.

இந்தோ-ஐரோப்பியத்தில் அதி (*ati*):

உலகில் பல மொழிக் குடும்பங்கள் உள்ளன. அவற்றில் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பம் பெரியது. யுரேசியன் ஸ்டெபி புல்வெளியில் தோற்றம் பெற்ற இம்மொழிக்குடும்பம் இன்று உலகம் முழுவதும் பரவி உள்ளது. இந்தியாவின் பழமையான மொழிகளில் ஒன்றான சமஸ்கிருதம்(**Skt**) இம்மொழிக்குடும்பத்தின் முக்கிய மொழி ஆகும். சமஸ்கிருதத்தில் "மிகை" பொருளை அளிக்கும் முன்னொட்டு அதி.

அறிஞர் மோனியர் வில்லியம்ஸ் தனது *A Sanskrit-English Dictionary* நூலில் "அதி எனும் முன்னொட்டு பெயர்ச்சொல் மற்றும் வினையுரிச்சொல் அரிதாக வினைச்சொல்லுக்கு அதிகப்படியான, அசாதாரணமான, தீவிரமான, மிக அதிகமாக, மிகவும் முதலிய பொருளை தருவதாக பெரும்பாலும் அமையும்" என உரைக்கிறார்[1].

அறிஞர் R.L.Turner தனது *A Comprehensive Dictionary of the Indo-Aryan Languge* நூலில் அதி எனும் சமஸ்கிருத சொல் Beyond, over முதலிய பொருளைத் தருவதாக உரைக்கிறார்[2].

---

[1] "Ati is often prefixed to nouns and adjectives, and rarely to verbs, in the sense excessive, extraordinary, intense; excessively, too; exceedingly, very."- Williams, Monier., *A Sanskrit-English Dictionary*, Oxford University Press, 1899.Pg.No:12

[2] "**áti** 'beyond, over' RV. Ash. *di*, *da* 'also', Kt. *di*, Pr. *dī̆*, *dĕ̄*, Kho. Paš. *di* (NTS ii 253, xv 257, IIFL iii 3, 52 in each case with ?); — Mai. ky. *ē* 'and' (~ *ū*) Buddruss Kan 41:

The Oxford Introduction to Proto Indo-European and Proto Indo-European World எனும் நூலில் இச்சொல்லுக்கான தொல் இந்தோ-ஐரோப்பிய வேர் (Proto Indo-European Root) காட்டப்பட்டுள்ளது. ***$h_1$eti*** எனும் "and" அத்துடன் "Further, Yet" முதலிய பொருளைத் தருவதாக J.P.Mallory மற்றும் D.Q.Adams குறிப்பிடுகின்றனர். இவ்வேர் மூலம் பின்வரும் மொழிகளில் பின்வரும் சொற்களாக மாறி பின்வரும் பொருளைத் தருகிறது.

Gaulish ***eti*** 'also, further', Lat ***et*** 'and also', Goth ***iþ*** 'but', Grk ***ἔτι*** 'yet, further', in Indo-Iranian, 'over' (Skt ***áti*** 'over, towards')

இந்தோ-ஈரானியதிலும் Avestan. ***Aiti*** **'**over, beyond', Old Persian. ***atiy*** 'beyond, across, past' மிகை கருத்துப் பொருளில் கையாளப்பட்டுள்ளது.

மேலும் இந்த தொல் இந்தோ-ஐரோப்பிய மூலம் இணைவுச் சொல் (Conjunction - and) மற்றும் கூடுதல் (In Addition) பொருள் தரும் சொல்லாக உள்ளது[3].

பாலி மொழி அகராதி Pa.***ati*** எனும் சொல் சமஸ்கிருதத்திற்கு உரியது எனவும் மிகை கருத்தில் முன்னொட்டாகவும் பயன்படுவதாக உரைக்கிறது[4].

---

doubtful.Addenda: **áti:** Kho. *di* 'also' BKhoT 67."- Turner R.L., *A Comparitive Dictionary of the Indo-Aryan Lanaguage,* Oxford University Press,1966, Pg.No:11

[3] Mallory.J.P and Adams.D.Q., *The oxford Introduction to Proto Indo-European and Proto Indo-European World*, Oxford University Press,2006, Pg.No: 422

[4] "***Ati*** ind. [ts], prefix to nouns, adjectives, adverbs; preverb to verbs; before vowels (except ĭ-) generally, but not always, taking the form acc- , sometimes with strengthening of following vowel; " - Cone, Margaret., *A Dictionary of PALI* , The Pali Text Society-Oxford,2001, Pg.No:59.

ஞால முதன் மொழி ஆய்வில் (Nostratic) அதி *(ati)*:

ஞால முதன் மொழி(**Nostratic**) ஆய்வில் இயங்கும் அறிஞர் A.R.Bomhard "அதி" குறித்தும் அதன் மூலம் குறித்தும் குறிப்பிடுகிறார்.

Proto-Nostratic root ***ʔet^h*** -:

(vb.) ***ʔet^h***- 'to oppose';

(n.) ***ʔet^h-a*** 'that which is opposite'

முன் ஞால முதன் மொழி வேர்(***ʔet^h**-) எதிர்ப்பு, எதிர்மறை பொருளைத் தருகிறது. திராவிட மற்றும் எகிப்திய மொழிகளிலும் எதிர்ப்பு,எதிர்மறை என்று பொருள் தரும் சொல் ஆகிறது.ஆனால் இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் மிகை கருத்துப் பொருளைத் தருகிறது[5].

Proto-Indo-European adverb ***ʔet^hi*** ('from the opposite side' >) 'over, beyond, further': Sanskrit ***áti*** 'over, beyond'; Avestan aiti 'over, beyond'; Old Persian ***atiy*** 'beyond, across, past'; Greek ***ἔτι*** 'yet, as yet, still; further, moreover, besides; hereafter'; Phrygian ***ετι-*** 'again'; Latin ***et*** 'and'; Gaulish ***eti*** 'also, further'; Middle Breton ***eta*** 'so'; Gothic ***iþ*** 'but'; Old Icelandic ***eða, eðr*** 'still, yet'; Old English ***eððа*** 'and, or'; Old High German ***ith***- prefix indicating repetition, addition; Old Prussian ***et***- 'besides'.

திராவிட மொழிகளில் அதி:

திராவிட மொழிகளான கன்னடம்[6],தெலுங்கு[7],மலையாளம்[8],துளு[9]

---

[5] Bomhard.Allan.R., *A Comprehensive Introduction to Nostratic Comparatve Lingustics-With Special reference to Indo-European-Volume 3*, Florance,SC,2018. Pg.No: 780

[6] Ucida.N and Purohit Raja.B.B., *Kannada English Etymology Dictionary,* ILCAA,Tokyo University of Forgien Studies,2013.Pg.No:27-28.

[7] Gwynn.J.P.L., *A Telugu-English Dictionary*, Oxford University Press,1991. Pg.No:13.

[8] Gundert, Hermann., *A Malayalam and English dictionary*. C. Stolz; Trübner & Co,

மொழிகளில் “அதி” என்ற முன்னொட்டு கருத்து பயன்படுத்தப்படுகிறது. இச்சொல் சமஸ்கிருதத்திலிருந்து பெறப்பட்டது என அதன் அகராதிகள் குறிப்பிடுகின்றன. தமிழ் மொழியிலும் மிகுதிப் பொருளில் பயன்படுத்தப்படுகிறது. சென்னை பல்கலைக்கழக தமிழ் அகராதி கீழ்க்காணும் பொருள் தருகிறது[10].

அதி² **ati ,** < ***ati.*** *part*. Pref. implying excessiveness, intensity, used generally with Skt. words; மிகுதிப்பொருளதோ ரிடைச்சொல். (குறள், 636, உரை.) — *n*. Excess; மிகுதி. *Colloq*.

அறிஞர்கள் பர்ரோ மற்றும் எமனோ தொகுத்த திராவிட வேர்ச்சொல் அகராதியிலும் அதி என்ற சொல் குறித்த குறிப்பு இல்லை. ஆனால் சங்ககாலத்தில் ஒரு அரசின் பெயராகவே (அதியர் குடி- Atiyar Clan) இச்சொல் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

அறிஞர் பர்ரோ “The Loss of Intial *c/s* in South Dravidian” எனும் கட்டுரையில் அதிய எனும் சொல் நிச்சயமாக பூர்வீகப் பெயராக தான் இருக்க வேண்டும். சமஸ்கிருத சத்ய உடன் தொடர்பு படுத்த முடியாது எனக் கூறுகிறார்[11].

செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி “அதி” எனும் சொல் மிகுதிப் பொருள் தரும் முன்னொட்டு எனவும் அது தமிழிலிருந்து சமஸ்கிருதம் மற்றும்

1872.Pg.No:20.

[9] Manner.A.M., *A Tulu-English Dictionary*, BASEL MISSION Press,1886, Pg.No:17.

[10] University of Madras. *Tamil lexicon*. [Madras], University of Madras, 1924-1936.

[11] “***Atiya*** must ofcourse be a native name and cannot be connected with Skt.***Satya***-Truth”.

- Burrow.T., *Collected Papers on Dravidian Lingustics*, Annamalai University,1968.Pg: 159

சிங்கள(***Sinh***) மொழிக்கு சென்றதாக கூறுகிறது[12].

அதி > **Skt. *ati* . Sinh. *ati***

[அதை → அதி. அதைத்தல் = வீங்குதல், பருத்தல், மிகுதல், செருக்குதல்]

ரிக் வேதத்தில் அதி:

பழம்பெரும் சமஸ்கிருத நூலாக ரிக் வேதம் கருதப்படுகிறது. இதன் காலம் பொ.ஆ.மு 1400-1000 என கருதப்படுகிறது[13]. *Atithi-gva* எனும் பெயர் ரிக் வேதத்தில் 15 முறை வருகிறது. இது திவோதசா (Divodasa) எனும் அரசனைக் குறிக்கப் பயன்பட்டது[14].

1.51.6. tvaṃ kutsaṃ śuṣṇahatyeṣvāvithārandhayo.atithighvāya śambaram |
"Thou savedst Kutsa when Śuṣṇa was smitten down; to Atithigva gavest Śambara for a prey."
4.26.3. śatatamaṃ veśyaṃ sarvatātā divodāsam atithighvaṃ yad āvam ||
"In the wild joy of Soma I demolished Śambara's forts, ninety-and-nine, together; And, utterly, the hundredth habitation, when helping Divodāsa Atithigva."
10.48.8. ahaṃ ghuṅghubhyo atithighvamiṣkaramiṣaṃ na vṛtraturaṃvikṣu dhārayam |
"Against the Gungus I made Atithigva strong, and kept him mid the folk like Vṛtra-conquering strength, When I won glory in the great foe-slaying fight, in battle where Karanja fell, and Parṇaya."

---

12 Pavanar, Devaneya., *A Comprehensive Etymological Dictionary of the Tamil Language Vol-I, Part-I*, Tamil Nadu Text Book Corporation,1985. Pg.No:207-208.

13 Witzel, Michael., *Early Aryans and their Neighbors outside and inside India*, Journal of Bio Science 44:58:1-10, 20919, DOI:10..1007/S12038-019-9881-7.

14 Griffith, Ralph T. H.,*Hymns Of The Rigveda*, E.J. Lazarus,1889

பாணினியின் அஷ்டாத்தியாயி சமஸ்கிருத அதி குறித்து விளக்குகிறது[15].

1.4.95. *அதி:அதிக்ரமணே ச*

“அதி என்ற நிபாதம் மிகுதி,சிறப்பு என்ற பொருட்களில் பயன்படுத்தும் போது கர்மப்ரவசனியமாகும்”.

உ- உயர்ச்சிக் கருத்து வேர்:

“உ” என்பது உயர்ச்சிக் கருத்து வேர்[16]. தமிழ் மற்றும் பிற தென் திராவிட மொழிகளில் இந்த வேர் பல சொல் ஆக்கங்களை அளித்துள்ளது.

உ > உய்

உய்+அர் >உயர் = மேலெழு.

உ > உய்+[அ]து > உய்து >உது

உ > உது> உது+இ > உதி (உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகும்- தொல்.எழுத்து.உயிர் மயங்கியல்:41)

உதி > ஒதி [உகர- ஒகர மாற்றம்]

உதி: மிக நெட்டுக்கு வளரும் மரம், உதிய/ஒதிய மரம்.(**DEDR 614**)[17]

Ta.* uti, oti** Indian ash tree, ***Odina wodier*; uti** falcate trumpet flower, ***Dolichandrone falcata. Ma.* uti, oti *O. pinnata. Ka.* uḍi *O. wodier Roxb. ***Te.* oddi *O. pinnata. Kol.*** (Wagh.) **oddī** id. (<

---

15 மீனாட்சி.கு., *பாணினியின் அஷ்டாத்தியாயி பகுதி-I*, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிலையம்,1998.Pg.No:114.

16 பழனிச்சாமி.வை. செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி- Volume I, Part III, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிலையம்,1997.Pg.No:1.

17 Burrow, T., and M. B. Emeneau. *A Dravidian Etymological dictionary.* 2nd ed. Oxford [Oxfordshire]: Clarendon Press, 1984.Pg.No:60.

Te.). [***O. pinnata*** is not identified in Hooker.]

செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி உதி எனும் சொல்லுக்கு பொருளாக ஒதிய மரம் எனக் குறிக்கிறது. மேலும் பருத்தல் எனும் பொருளையும் தருகிறது[18].

உது → உதி = மேலெழும்புதல்,கிளர்தல்,விளங்குதல்.(செ.சொ.அ.Vol I,Part III:55)

திராவிட மொழிகளில் உகர- ஒகர மாற்றம் இயல்பாக நடக்கும்.

அதே வேளை பேரா.பர்ரோ தனது Dravidian Studies II-ல் "*i/e* and *u/o* (தென் திராவிடத்தில்) இடையேயான மாற்றம் தமிழ்,மலையாளம் *i u* மற்றும் தெலுங்கு,கன்னடம் *e o* அகச்சீரமைப்பு (internal reconstruction) மூலம் தொல் திராவிட மொழிகளின் அனைத்து வழக்குகளிலும் இல்லை" எனக் கூறுகிறார்[19].

திராவிட வேர்ச் சொல் அகராதி உதி (*uti,oti*) என்பது தமிழில் உதிய மரத்தைக் குறிப்பதாக உள்ளது. பிற திராவிட மொழிகளின் அகராதிகளிலும் உதி/ஒதி எனும் சொல் தோன்றுதல்,உயர்வு,மிகை முதலிய பொருள்களைத் தருகிறது.

Te. ఉదయం **udayam** *n*. **1** morning. **2** rising of sun and other heavenly bodies. **3** birth. **4** advancement, prosperity[20].

Ka. ಉದ್ **ud.** up, upwards; upon, on; over, above; out, out of, from, away from, apart[21].

---

[18] பழனிச்சாமி.வை. செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி- Volume I, Part III, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிலையம்,1997.Pg.No:55 & 351.

[19] Krishnamurti, Bhadriraju., *Papers in Dravidian linguistics.* Dravidian University,2012,Pg.No:202

[20] Gwynn, J. P. L., *A Telugu-English dictionary. Oxford University Press*, 1991.Pg.No:69.

[21] Kittel, Ferdinand., *Kannada-English dictionary.* University of Madras, 1968-1971.Pg.No:232.

Ma. ഒതി **oti** oδi = ഉതി Odina[22].

Tu. **Udaya** The rising sun, Moon, or other heavenly bodies[23].

உதி+[ப்]+பு > உதிப்பு = தோற்றம்,எழுச்சி.

உது+ஐ > உதை = காலில் ஏற்று,மேலெழுமாறு ஏற்று.**(DEDR 616)**

உதி+அன் > உதியன் = [மேன்மையோன், மேலோன்],சேரன்[24].

அன்=ஆண்பால் பெயர் விகுதி.

உதியன்+சேரல் > உதியஞ்சேரல் (அகம்.233:8)

உதி > [ஒதி] > அதி = மிகுதி, அப்பால், மேல், மேன்மை[25]. **[*உகர- ஒகர-அகர மாற்றம்*]**

<u>காண்க</u>:

துளிர் > [தொளிர்] > தளிர் (கலி 143:29)

முடங்கு > [மொடங்கு] > மடங்கு ((முடங்கு-கலி.94;9,மடங்கு-புறம். 223:2)

நுகில் > [நொகில்] > நகில் (பரி.6:18)

உம் > [ஒம்] > அம் >**ஆம்** (ஒத்திசைப்பு குறியீடு: *காரணம் இதழ்* 3:28)

அதி+அம் >அதியம் > அதிகம் [யகர-ககர திரிபு] ஒ.நோ: வாணியன் > வாணிகன்

---

[22] Gundert, Hermann., *A Malayalam and English dictionary*. Mangalore, London, Trübner & Co., 1872.Pg.No:176

[23] Manner.A.Rev., *Tulu-English Dictionary,* The Basel Mission Press, 1886.Pg.No:68

[24] அருளி.ப., *காரணம்-வேரியல் திங்கள் ஆராய்ச்சித் திங்கள் இதழ்*-8, வேரியம் கல்வி அறக்கட்டளை.பிப்ரவரி,2022.Pg.No:24.

[25] Ibid.

அதிகம்=மிக மிகுதி,மிகுதி[26].

பிற திராவிட மொழிகளில் உகர-ஒகர-அகர மாற்றம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் உகர-ஒகர மற்றும் ஒகர-உகர மாற்றம் உள்ளது. தமிழில் உகர-ஒகர-அகர உள்ளது. ஒருவேளை இந்த மாற்றம் தொல் திராவிட மொழியில் இருந்திருக்கலாம். தொல் திராவிட மொழிக்கு மிக நெருக்கமான தமிழில் இன்றும் வழக்கில் இருக்கிறது. இது நீண்ட ஆய்வுக்குரியது.

சங்க இலக்கியங்களில் உதி-அதி:

திராவிட மொழிகளின் இலக்கியங்களில் சங்க இலக்கியம் தொன்மையானது. சங்க இலக்கியம் மற்றும் தொல்காப்பியத்தில் அதி என்ற சொல் ஏறக்குறைய 19 இடங்களில் வருகிறது. பெயர்ச் சொல்லாக அதியமான்,அதியர் கோமான்,அதிகன் என 5 முறை வந்துள்ளது.

அகம்.162:17. *நசைபிழைப்பு அறியாக் கழல்தொடி அதிகன்*

அகம்.325:8. ....*நாடுகோள்*

அள்ளனைப் பணித்த அதியன் பின்றை

புறம்.101:5. *அணிபூண் அணிந்த யானை இயல்தேர்*

அதியமான்; பரிசில் பெறூஉங் காலம்

காட்டுமல்லியைக் குறிக்கும் "அதிரல்" எனும் சொல் 12 முறை வந்துள்ளது.

உ > உது > உதி

உதி > [ஒதி] > அதி = கூர்மை,மேன்மை,மிக்கெழுதல்.

---

[26] Pavanar, Devaneya., *A Comprehensive Etymological Dictionary of the Tamil Language Vol-I, Part-I,* Tamil Nadu Text Book Corporation,1985.Pg.No:208.

அதி > அதி + இர் = அதிர் > அதிரல் (காரணம் இதழ் 2:28-28)

புறம்.269:1. *குயில்வாய் அன்ன கூர்முகை அதிரல்*

“அதிகுரல்” எனும் சொல் 4 முறை வந்துள்ளது (பரி.11:74, புறம்.160:3, நற்.228:2, நற்.248:7).

தொல்காப்பியத்தில் இருமுறை இடம் பெற்றுள்ளது (தொல்.சொல்.உயிரியல்:18, தொல்.பொருள்.மரபியல்:113).

சங்க இலக்கியம் மற்றும் தொல்காப்பியத்தில் உதி என்ற சொல் ஏறக்குறைய பெயர்ச் சொல்லாக (உதியன்) 4 இடங்களில் வருகிறது.

அகம்.65:5. *நாடுகண் அகற்றிய உதியஞ் சேரற்*

அகம்.168:7. *உதியன் அட்டில் போல ஒலிஎழுந்து*

அகம்.258:1. *நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்*

தொல்காப்பியத்தில் இருமுறை இடம் பெற்றுள்ளது (தொல்.எழுத்து:41,60).

மேலும் இலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் பிராமி கல்வெட்டில் உதியன் அல்லது உதிரன் எனும் பெயர் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது[27].

முடிவுரை:

அதி எனும் மிகை கருத்து முன்னொட்டு சமஸ்கிருதத்துக்கு உரியது

---

[27] Pranavitana, S., *Inscription of Ceylon: Early Brahmi Inscriptions*, The Department of Archeology Ceylon,Colombo,1970.Pg.No: 41.No:538. And புஷ்பராட்ணம், பரமு., *பண்டை இலங்கையில் தமிழும் தமிழரும்*, கொழும்புத் தமிழ்ச் சங்கம்,2003.Pg.No:33-34.

எனவும், சமஸ்கிருதத்திலிருந்து பிற மொழிகள் கடன் பெற்றன என்ற கருத்து நிலவுகிறது. ஆனால் மேற்கண்ட சான்றுகள் மூலம் அதி என்ற மிகை,உயர்வு கருத்து சொல்லுக்குத் திராவிட மூலமும் உண்டு என்றும் அது தொல் திராவிடத்துக்கு நெருக்கமான தமிழில் இன்றும் வழக்கில் உண்டு என்ற கருத்தை முன்வைக்கிறேன். இது மிக நீண்ட ஆய்வுக்குரியது.